சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு.கோ.நீலமேகம்(மறைவு) என்பவரின் மகன் திரு.நீ.விஜயகாந்த் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (பக.4(1)த் துறை

அரசாணை (1டி) எண்.124 | நாள் 14.09.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம், ஆவணி 28

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.39164/ஜே/இ3/2020, நாள் 31.12.2022.

******

ஆணை:-

நீலகிரி மாவட்டம், ஆர்.கே.புரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் இரவுக் காவலராகப் பணிபுரிந்த திரு.கோ.நீலமேகம் என்பார் பணியிலிருக்கும் போது 14.04.2009 அன்று பணியிடைக் காலமானார். அவரது மனைவி, தனது மகன் திரு.நீ.விஜயகாந்த் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 18.08.2010 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு.நீ.விஜயகாந்த் என்பவர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை மார்ச் 1999-இல் தேர்ச்சி பெற்றுள்ளார். இவரின் பிறந்த தேதி 18.02.1984. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தனியர் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார். இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தின் வறிய நிலையையும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்பதையும் கருத்தில் கொண்டு, திரு.நீ.விஜயகாந்த் என்பவருக்கு நீலகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.0131/அ1/2018, நாள் 06.01.2020-ல், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, அவர் 07.01.2020 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

HEADMASTER
Govt. Hr. Sec. School.
Pandalur-643 233
The Nilgiris District, T.N.

Scanned with OKEN Scanner

மேற்தெரிவிக்கப்பட்ட நிலையில், திரு.நீ.விஜயகாந்த் என்பவரது பணியினை தனியர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியில் இணைந்த 07.01.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் கோரியுள்ளார்.

2. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.நீ.விஜயகாந்த் என்பவரது பணியினை, பணி நியமனத்திற்கான தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 07.01.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் விதிகளின்படி பெற தகுதியுடைவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.4910/ட்டி-1/2023, நாள் 10.07.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.5165/ஜி1/2023, நாள் 28.07.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

5/4/24
HEADMASTER
Govt. Hr. Sec. School.
Pandalur-643 233
The Nilgiris District, T.N.

Scanned with OKEN Scanner